**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC. 99/2019 <br> Sessions : <br> Deposition of Witness for :PW- 8 <br> Name : கார்த்திகேயன் ( உதவி கண்காணிப்பாளர், முதுநிலை கோட்ட அலுவகம் தஞ்சாவூர்) <br> Father's/Husband's Name : <br> Nationality : Indian | Village: <br> Age :49 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 23.10.2024**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி.அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

குவிமுச. பிரிவு 311ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட Crmp.No.2135/2023. 18.10.2023ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

பூட்டியிருந்த சாத்தனூர் அஞ்சலகத்தை திறந்து பார்ப்பதற்கு யார் யார் சென்றோம் என்றால் அப்போது குத்தாலம் உபகோட்ட அஞ்சல் ஆய்வாளராக இருந்த சங்கர்

என்பவர்தான் திறந்து பார்த்து விசாரணை அதிகாரியாக இருந்தார். அப்போது நான் செல்லவில்லை. போலிசார் விசாரணையில் பாலசுப்ரமணியனின் அண்ணனிடம் அஞ்சலகத்தின் சாவியை பெற்று அஞ்சலகத்தை திறந்து பரிசோதனை செய்ததில் கிளை அலுவலகத்தில் பணம் குறைவாக இருந்தது என்பதை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அஞ்சலகத்தில் பணம் குறைவாக இருந்தது என்பதை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. நான் 10.02.2011ம் தேதிதான் குத்தாலம் உபகோட்ட அஞ்சலக ஆய்வாளராக பணியேற்றேன். பதிவேடுகள் யாரிடம் இருந்தது என்றால் கும்பகோணம் அஞ்சல் கண்காணிப்பாளர் அலுலவலகத்தில் இருந்தது. நான் பொறுப்பேற்ற பிறகு நான் பெற்றுக் கொண்டேன். சாத்தனூர் அஞ்சலகத்தில் இருந்து கும்பகோணம் அஞ்சல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு பதிவேடு எவ்வாறு சென்றது என்று தெரியுமா என்றால் தெரியும். விசாரணை அதிகாரி சங்கர் தொடர்புடைய பதிவேடுகளை கைப்பற்றி கும்பகோணம் அஞ்சல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். அவ்வாறு சங்கர் எந்த தேதியில் பதிவேடுகளை கைப்பற்றியது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் பதிவேடுகளில் எந்த தேதியில் கைப்பற்றப்பட்டது என்பது குறித்து பதிவுகள் உள்ளது. நான் அஞ்சலக சேமிப்பு கணக்கு புத்தகங்களை பார்த்தேனா என்றால் பார்த்தேன். போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். திருநீலக்குடி காவல் நிலையத்தில் நான் எந்த தேதியில் புகார் அளித்தேன் என்றால் எனக்கு முன்பாக இருந்த விசாரணை அதிகாரி கொடுத்த புகாரை திருநீலக்குடி போலிசார் வாங்காததால் 24.05.2011ம் தேதி கும்பகோணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் புகார் அளித்து நீதிமன்ற உத்தரவின்பேரில் 26.05.2011ம் தேதி திருநீலக்குடி காவல் நிலையத்தில் புகார் அளித்ததின்பேரில் 02.06.2011ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. விசாரணை அதிகாரி சங்கர் என்பவரிடமிருந்து நான் புகாரை பெற்று காவல் நிலையத்தில்

அளித்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில்தான் மனு தாக்கல் செய்தேன். நான் சங்கரை விசாரணை செய்தேனா என்றால் இல்லை. பொதுமக்கள் யாரும் எங்களிடம் புகார் மனு அளித்தார்களா என்றால் இல்லை. கிளை அஞ்சலகத்தில் சேமிப்பு கணக்கில் பணம் செலுத்தப்பட்டால் பதிவேடுகளில் பதிவு செய்து தொகையை அன்றைய தினமே துணை அஞ்சலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு அனுப்பபடும் தொகையை துணை அஞ்சலகத்தில் சரிபார்ப்பார்கள் என்றால் சரிதான். நரசிங்கன்பேட்டை துணை அஞ்சலக அதிகாரி வாரம் ஒருமுறை சாத்தனூர் கிளை அஞ்சலகத்தின் பதிவேடுகளை சரிபார்ப்பார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு கணக்கு பார்ப்பதற்கு ஆய்வு அலுவலர்கள் தனியாக உள்ளார்கள். அவர்கள் 3 மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்வார்கள். 2005 முதல் 2010 வரையிலான காலகட்டத்தில் 3 மாதத்திற்கு ஒருமுறையும் ஆண்டிற்கு ஒரு முறை ஆய்வாளராலும் ஆய்வு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பதிவேடுகள் மற்றும் பாஸ்புத்தகங்களின் அசலை போலிசாரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். 6 நபர்களின் வாக்குமூலங்கள் என்னால் தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2005 முதல் 2011ம் ஆண்டு வரை சாத்தனூர் கிளை அஞ்சலகத்தில் எந்தவித கையாடலும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. செய்யப்பட்டுள்ளது. பதிவேடுகள் மற்றும் கணக்குகள் சரியாக இருந்ததால்தான் எனக்கு முன்பாக இருந்த விசாரணை அதிகாரியிடம் திருநீலக்குடி போலிசார் பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும் நாங்கள் பின்னிட்டு ஆவணங்களை தயார் செய்து நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.10.23 19:30:57 +0000

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC. 99/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : PW-1 | Village: |
| Name : வள்ளி | Age : 42 |
| Father's/Husband's Name : ராஜா | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 23.10.2024**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி.அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

குவிமுச. பிரிவு 311ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட Crmp.No.2135/2023. 18.10.2023ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

குத்தாலம் போலிசார் என்னை விசாரித்தபோது எனது அஞ்சலக பாஸ்புத்தகத்தை கொடுத்தேனா என்றால் சாத்தனூர் அஞ்சலகத்தில் எனது பாஸ்புத்தகத்தை பணம் தருவதாக சொல்லி வாங்கி வைத்து கொண்டதால் போலிசாரிடம் கொடுக்கவில்லை. எனது பாஸ்புத்தகத்தை திருப்பி கேட்டு மனு எதுவும் கொடுத்தேனா என்றால் எனது அப்பா

கொடுத்துள்ளார். போலிசார் விசாரணையில் நாங்கள் 4 பேர் சம்பாதித்து ரூ.40,000/- அஞ்சலக கணக்கில் போட்டு வைத்துள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் எனது அக்கா சொன்னார். நான் சொல்லவில்லை. அஞ்சலகத்தில் யார் பெயரில் கணக்கு வைத்திருந்தோம் என்றால் லோகேஸ்வரி, கவிதா, ரமணி மற்றும் எனது பெயரில் தனித்தனியாக கணக்கு வைத்திருந்தோம். மேற்படி லோகேஸ்வரி, கவிதா , ரமணி ஆகியோரின் பாஸ்புத்தகம் உள்ளதா என்றால் அஞ்சலகத்தில் வேலை பார்த்த பாலசுப்ரமணியன் அந்த பாஸ்புத்தகங்களை வைத்துக்கொண்டார். எனது சகோதரிகள் மூவரையும் போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு அஞ்சலக கணக்கு எதுவும் துவங்கவில்லை என்றாலும் போலிசார் சொல்லி கொடுத்து கணக்கு வைத்திருந்ததாகவும் பாஸ்புத்தகங்களை எதிரி வைத்துக் கொண்டதாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.10.23 19:31:06 +0000

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**